ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

# பெரியாழ்வார் திருமொழி

## நான்காம்பத்து

______________

### 10-ஆம் திருமொழி - துப்புடையாரை

______*_______

* துப்புடையாரைஅடைவதெல்லாம்
சோர்விடத்துத்துணையாவரென்றே *
ஒப்பிலேனாகிலும்நின்னடைந்தேன்
ஆனைக்குநீஅருள்செய்தமையால் *
எய்ப்புஎன்னைவந்துநலியும்போது
அங்குஏதும்நானுன்னைநினைக்கமாட்டேன் *
அப்போதைக்குஇப்போதேசொல்லிவைத்தேன்
அரங்கத்தரவணைப்பள்ளியானே! (1)

சாமிடத்துஎன்னைக்குறிகொள்கண்டாய்
சங்கொடுசக்கரமேந்தினானே! *
சாமடித்துஎன்னைஅனேகதண்டம்
செய்வதாநிற்பர்நமன்தமர்கள் *
போமிடத்துஉந்திறத்துஎத்தனையும்
புகாவண்ணம்நிற்பதோர்மாயைவல்லை *
ஆமிடத்தேஉன்னைச்சொல்லிவைத்தேன்
அரங்கத்தரவணைப்பள்ளியானே! (2)

எல்லையில்வாசல்குறுகச்சென்றால்
எற்றிநமன்தமர்பற்றும்போது *
நில்லுமினென்னும்உபாயமில்லை
நேமியும்சங்கமும்ஏந்தினானே! *
சொல்லலாம்போதேஉன்நாமமெல்லாம்
சொல்லினேன்என்னைக்குறிக்கொண்டுஎன்றும் *
அல்லல்படாவண்ணம்காக்கவேண்டும்
அரங்கத்தரவணைப்பள்ளியானே! (3)

ஒற்றைவிடையனும்நான்முகனும்
உன்னையறியாப்பெருமையோனே! *
முற்றஉலகெல்லாம்நீயேயாகி

மூன்றெழுத்தாயமுதல்வனேயோ! *
அற்றதுவாணாள்இவற்கொன்றெண்ணி
அஞ்சநமந்தமர்பற்றலுற்ற *
அற்றைக்கு, நீஎன்னைக்காக்கவேண்டும்
அரங்கத்தரவணைப்பள்ளியானே! (4)

பையரவினணைப்பாற்கடலுள்
பள்ளிகொள்கின்றபரமமூர்த்தி! *
உய்யஉலகுபடைக்கவேண்டி
உந்தியில்தோற்றினாய்நான்முகனை *
வையமனிசரைப்பொய்யென்Tஎண்ணிக்
காலனையும்உடனேபடைத்தாய் *
ஐய! எனிஎன்னைக் காக்கவேண்டும்
அரங்கத்தரவணைப்பள்ளியானே! (5)

தண்ணெனவில்லைநமன்தமர்கள்
சாலக்கொடுமைகள்செய்யாநிற்பர் *
மண்ணொடுநீரும்எரியும்காலும்
மற்றும்ஆகாசமுமாகிநின்றாய்! *
எண்ணலாம்போதேஉன்நாமமெல்லாம்
எண்ணினேன்என்னைக்குறிக்கொண்டுஎன்றும் *
அண்ணலே! நீஎன்னைக்காக்கவேண்டும்
அரங்கத்தரவணைப்பள்ளியானே! (6)

செஞ்சொல்மறைப்பொருளாகிநின்ற
தேவர்கள்நாயகனே! எம்மானே! *
எஞ்சலிலென்னுடையின்னமுதே!
ஏழுலகுமுடையாய்! என்னப்பா! *
வ்ஞ்சவுருவின்நமந்தமர்கள்
வலிந்துநலிந்துஎன்னைப்பற்றும்போது *
# அஞ்சலமென்றுஎன்னைக்காக்கவேண்டும்
அரங்கத்தரவணைப்பள்ளியானே! (7)

நான்ஏதும்உன்மாயமொன்றறியேன்
நமன்தமர்ப்ற்றிநலிந்திட்டு * இந்த
ஊனேபுகேயென்றுகோதும்போது
அங்கேதும்நான்உன்னைநினைக்கமாட்டேன் *
வானேய்வானவர்தங்களீசா!
மதுரைப்பிறந்தமாமாயனே! * என்
ஆனாய்! நீஎன்னைக்காக்கவேண்டும்
அரங்கத்தரவணைப்பள்ளியானே! (8)

குன்றெடுத்துஆநிரைகாத்தஆயா!
கோநிரைமேய்த்தவனே! எம்மானே! *
அன்றுமுதல்என்றறுதியா
ஆதியஞ்சோதி! மறந்தறியேன் *
நன்றும்கொடியநமந்தமர்கள்
நலிந்துவந்துஎன்னைப்பற்றும்போது *
அன்றங்குநீஎன்னைக்காக்கவேண்டும்
அரங்கத்தரவணைப்பள்ளியானே! (9)

* மாயவனைமதுசூதனனை
மாதவனைமறையோர்களேத்தும் *
ஆயர்களேற்றினைஅச்சுதனை
அரங்கத்தரவணைப்பள்ளியானை *
வேயர்புகழ்வில்லிபுத்தூர்மன்
விட்டுசித்தன்சொன்னமலைபத்தும் *
தூயமனத்தனராகிவல்லார்
தூமணிவண்ணனுக்காளர்தாமே. (10)

அடிவரவு: துப்பு சாமிடத்து எல்லை ஒற்றை பை தண்ணெனவு செங்சொல் நான் குறு மாயவனை வாக்கு.